[1992 மார்ச் 9

136

ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா.

*1508 திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் வட்டம், கடம்பங்குடி கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கையினை இன்று வெளியிடுவார்கள். (குறுக்கீடு).

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். சில விதிகளின் கீழ் எடுக்க முடியவில்லை.